## வரையறுக்கப்பட்ட மகாவலி உசாத்துணைப் பணியக (தனியார்) கம்பனி – 2016

வரையறுக்கப்பட்ட மகாவலி உசாத்துணைப் பணியக (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் ஸ்தாபிப்பு

பங்கொன்று ரூபா 100 பெறுமதியிலான சாதாரண பங்குகளை கம்பனியின் மூலதனம் கொண்டிருத்தல் வேண்டுமென 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் கூட்டுத்தாபன ஸ்தாபிப்பின் கீழ் 42(1) ஆம் பிரிவால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கம்பனியின் அகவிதியின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட மூலதனம் பங்கொன்று ரூபா 10 பெறுமதியிலான 5,000,000 பங்குகளுடன் 1998 யூன் 18 இல் இக் கம்பனி பதிவுசெய்யப்பட்டிருந்தது. கம்பனியின் 6,384 எண்ணிக்கையான பங்குகள் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு பங்கு இலங்கை மகாவலி அதிகாரசபையின் செயலாளரின் சார்பில் வழங்கப்பட்டிருந்தது.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட மகாவலி உசாத்துணைப் பணியக (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 17 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்தம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யத் தவறியதன் காரணமாக ரூபா 3,519,602 கிரயமான முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட நிலையான சொத்துக்கள் மேலும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க, மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 4,135,400 தொகை மார்ச் மாதத்திற்கான ஆலோசனைக் கட்டணங்களாக வெளிநாட்டு நிபுணர்களிற்கு பெறுமதி சேர் வரியில்லாமல் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 539,400 கூட்டுமொத்தமான செலுத்தப்படாத வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து மீள்நிதியிடப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் செலவினம் அதே தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் இரண்டு குத்தகைக் கம்பனிகளின் கடன்கொடுத்தோர்கள் முறையே ரூபா 4,850,729 மற்றும் ரூபா 892,285 தொகையான போதிலும் இவை நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 4,732,952 மற்றும் ரூபா 1,000,448 ஆக காட்டப்பட்டிருந்தன.

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,852,118 தொகையான பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1979 இன் 23 அம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| (i) 39(1) ஆம் பிரிவு | கம்பனிப் பணிப்பாளர் சபை, அரசாங்கப் பணிப்பாளர்கள் மற்றும் பங்குரித்துடைய பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக 07 அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனிப் பணிப்பாளர் சபை மூன்று அங்கத்தவர்களை மாத்திரம் கொண்டிருந்தது. |
| (ii) 45(1) ஆம் பிரிவு | கம்பனியின் பணிப்பாளர்களிலிருந்து ஒரு பணிப்பாளர் கம்பனியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் வரிசை அமைச்சின் செயலாளரால் தலைவர் நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) 2011 பெப்ரவரி 11 ஆம் திகதிய 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2015 சனவரி 31 ஆம் திகதிய 2/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி பரிசுப் பொருட்களிற்காக ரூபா 539,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 772,345 இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 6,462,537 இலாபத்தினை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 5,690,192 ஆன முன்னேற்றத்தினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஆலோசனைச் சேவைகள் மூலம் உழைக்கப்பட்ட இலாபம் ரூபா 4,834,463 ஆல் அதிகரித்தமை மேற்குறிப்பிடப்பட்ட முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 681,855 தொகையாக இருந்த கம்பனியின் வரிக்குப் பின்னரான தேறியலாபம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 6,462,537 ஆக அதிகரித்திருந்தது. ஊழியர் சம்பளங்கள், நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வுகள் மற்றும் வரி என்பவற்றை கருத்திற்கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 21,010,172 தொகையாக இருந்த கம்பனியின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 37,019,119 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அகவிதியின் பிரகாரம் கம்பனியின் ஸ்தாபிப்பில் எட்டு பிரதான நோக்கங்கள் காணப்பட்டதுடன் அதில் சில கீழே தரப்பட்டுள்ளன. அதற்கிணங்க, அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- இலங்கைக்குள்ளேயும் வெளியேயும் காணி மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்குரிய சாத்திய வளக் கற்கைகளை மேற்கொள்ளுதல், காணி கையாளுதல் மற்றும் நீர் வளங்கள் செயற்திட்டங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல் மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செயற்திட்டங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல்.

- சுற்றாடல் நிர்மாணச் செயற்திட்டங்களிற்கான அவசியமான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் திட்டங்களை தயாரித்தல் மற்றும் அத்தகைய செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் மற்றும் ஆய்வு திட்டங்களை தயாரித்தல் மற்றும் சுற்றாடல் மாசடைதலை கட்டுப்படுத்தும் செயற்திட்டங்களை இலங்கைக்குள்ளேயும் வெளியேயும் அமுல்ப்படுத்துதல்.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட பிரிவுகளில் எதிர்பார்க்கப்படும் செயற்பாட்டு இலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாததன் காரணமாக திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவுகளின் செயலாற்றல்களும் அடையப்பட்டிருந்தனவா என்பதை சரிபார்க்க முடியாதிருந்தது.

**4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 இலிருந்து 2012 வரையான காலப்பகுதிக்கான பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரி என்பன அனுப்பப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு ரூபா 1,810,836 தண்டப்பணம் செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 61 பீ பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பங்கிலாபத்தை வெளிப்படுத்தாததன் காரணமாக 2015 ஆம் ஆண்டின் இலாபத்திற்குரிய ரூபா 55,807 தொகையான பிரேரிக்கப்பட்ட பங்கிலாப வரி (Deemed dividend tax) மீளாய்வாண்டில் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

**4.3 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் 24 ஆம் திகதிய 16/0416/704/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் நிர்மாண ஒப்பந்தத்திற்கான திட்டத்தை மதிப்பீடு செய்து அங்கீகரித்தல் மற்றும் நிர்மாண வேலையை மேற்பார்வை செய்வதற்கான ஆலோசனை ஒப்பந்தம் ரூபா 167,174,700 தொகைக்கு (வரியின்றி) 2016 மார்ச் 15 இலிருந்து ஒரு வருடத்திற்கு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. கம்பனியால் அதற்காக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் பங்களிப்பின் அடிப்படையில் ஆலோசனையாளர்களை தெரிவுசெய்வதற்குரிய கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகி மொறகஹகந்த செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளரால் பரிந்துரைக்கப்பட்ட ஐந்து உத்தியோகத்தர்கள் உள்ளூர் ஆலோசனையாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். கம்பனியால் அதற்கான விலைப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி ஒப்பந்தத்திற்காக வெளிநாட்டு ஆலோசனையாளர்களை வேலைக்கமர்த்துவதற்கு தனியார் பொறியியல் ஆலோசனை கம்பனியொன்றிற்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வாகன விபத்து தொடர்பாக சாரதிக்கும் கம்பனிக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இழப்பீடு கோரி தொடரப்பட்டிருந்த வழக்கிற்காக கம்பனி சமூகமளிக்காததால் 2013 ஒக்தோபர் மாதத்தில் ரூபா 4.5 மில்லியன் இழப்பீட்டை செலுத்துவதற்கு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய இழப்பீட்டிற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ரூபா 2,000,000 தொகையான நிதியேற்பாடு 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு 2017 ஆம் ஆண்டில் இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது.

கம்பனியின் செயலாளர் இந்த வழக்கு தொடர்பாக அவரது கடமைகளை செய்யத் தவறியிருந்த போதிலும் அது தொடர்பாக முறையான பரீட்சிப்பை மேற்கொள்ளாமல் அவர் வேலையிலிருந்து விலகுவதற்கு அனுமதித்திருந்ததுடன் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இந்த விபத்தில் தொடர்புபட்ட சாரதியும் முறையான பரீட்சிப்பு மேற்கொள்ளப்படாமல் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் பாரியளவிலான நிர்மாணச் செயற்திட்டங்களிற்காக ஆலோசனை சேவையை வழங்குதல், பாரியளவிலான நிர்மாணத்தை மேற்கொள்ளுதல் மற்றும் திட்டத்தை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அந் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் அவசியமான உத்தியோகத்தர்களின் பதவிகள், பதவியணியை அங்கீகரிப்பதற்கும் அதற்குரிய பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் பதவியுயர்வு நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் கீழ் நிரந்தரப் பதவியிலுள்ள சட்ட உத்தியோகத்தர் கம்பனியின் செயலாளராக ரூபா 50,000 மாதாந்த சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் கம்பனிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார்.

(இ) கம்பனியின் உள்ளபடியான பதவியணியினர் 28 ஆக இருந்த போதிலும் சிரேஷ்ட பொறியியலாளர், ஆலோசனையாளர் (பொறியியல்) போன்ற பதவிகளிற்கு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புச் செய்யப்படாததன் காரணமாக பாரியளவிலான செயற்திட்டங்களிற்கான ஆலோசனை சேவைகளிற்கும் நிர்மாண நடவடிக்கைகளிற்கும் உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 04 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 14 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் பாதிடப்பட்ட தகவல்கள் மற்றும் உள்ளபடியான தகவல்களுக்கிடையில் 11 சதவீதம் தொடக்கம் 121 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஒரு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | அகவிதியில் குறிப்பிடப்பட்ட அனைத்து நோக்கங்களையும் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |